

மருதமலை சுப்ரமணிய சுவாமி திருக்கோயிலில் திருக்குட நன்னீராட்டு பெருவிழாவினை முன்னிட்டு விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு மருதமலை அடிவாரத்தில் அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியை தமிழ்நாடு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில், மாவட்டக் கழகச் செயலாளர்கள் நா. கார்த்திக், தொ.அ.ரவி, தளபதி முருகேசன், மாவட்டக்கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மண்டலத்தலை வர்கள், நிலைக்குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், நகரக்கழக, ஒன்றியக்கழக, பகுதிக்கழக,பேரூர்க்கழக, வட்டக்கழகச் செயலாளர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், நகர, ஒன்றிய, பகுதி,பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள, கழக செயல்வீரர்கள் கலந்து கொண்டனர்.

## திருச்சி ஒருங்கிணைந்த

# பஞ்சபூர் பேருந்து நிலையம்: முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்கிறார்!

## நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!

திருச்சி, ஏப். 7-

திருச்சியில் பல்வேறு அதிநவீன வசதிகளுடன் 115.68 ஏக்கர் பரப்பளவில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைக்க திட்டமிடப்பட்டது. அதில் ஒட்டுமொத்த வளர்ச்சி திட்டங்களுக்கும் என ரூ.900 கோடி மதிப்பீடு வழங்கப்பட்டது.

அரசு முதல்கட்டமாக ரூ.460 கோடி நிதி ஒதுக்கீடு செய்து அறிவித்தது. இந்நிலையில் ஒருங்கிணைந்த பேருந்து முனையம் மற்றும் இதர உட்கட்டமைப்பு பணிகளை 349.98 கோடி மதிப்பில் மேற்கொள்வதற்கு தமிழக முதல்வர் கடந்த 2021 டிச.30ம் தேதி அடிக்கல் நாட்டினார்.

கட்டுமானப் பணிகள் குறித்து தமிழக நகராட்சி



நிர்வாக துறை அமைச்சர் கே என் நேரு நேரில் ஆய்வு செய்து பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார் .

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து பேசிய அமைச்சர் :

தமிழக முதல்வர் அவர்கள் புதிய மார்க்கெட்டுக்கு அடிக்கல் நாட்டுகிறார் அதேபோல் தெர்மல் பகுதிக்கு அடிக்கல் நாட்டுகிறார் அதன் பிறகு புதிய பேருந்து நிலையத்தை திறந்து வைத்து, சுற்றி பார்த்து விழா மேடைக்கு தமிழக முதலமைச்சர் செல்கிறார்.

விழா மேடையில் 55 ஆயிரம் பேருக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்கி மேலும் நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார், மேலும் முன்னதாக வருகின்ற மே 8ம் தேதி தமிழக முதலமைச்சர் அவர்கள் திருச்சி வருகை தந்து கட்சி நிகழ்ச்சியில் பங்கேற்கிறார் அன்று இரவு திருச்சியில் தங்கி மறுநாள் 9ம் தேதி காலை நிகழ்ச்சியில் பங்கேற்கிறார் காலை 9:30 மணிக்கு நிகழ்ச்சி துவங்கி மதியம் 12 மணி வரை நடைபெற உள்ளது.

பொதுமக்களுக்கு தேவையான வசதிகள் அதிகமாக செய்யப்பட்டுள்ளது ஏற்கனவே இந்த பேருந்து நிலையம் கட்டுமான பணியின் போது கழிவறை வசதிகள் செய்யப்படாமல் இருந்தது அதனை கவனத்தில் கொண்டு அதிக கழிவறை வசதிகள் செய்யப்பட்டுள்ளது குடிநீர் வசதி செய்யப்பட்டுள்ளது ஆர்வோ வாட்டர் தயார் நிலையில் இருக்கிறது உணவகம் மற்றும் தேநீர் கடைகள் அமைக்கப்பட்டுள்ளது,

அதேபோன்று பிற பகுதிக்கு செல்லக்கூடிய வகையில் வாகன வசதிகள் பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது மேலும் நகரும் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளது,

உய்யக்கொண்டான் வாழ்க்கையில் கழிவுநீர் கழிப்பதாக இருந்த குற்றச்சாட்டு தவறு எனவும் சுத்தம் செய்யக்கூடிய கழிவுகள் தான் அங்கு ஊத்தப்படுகிறது எனவும் அது விவசாயத்துக்கு பயன்படும் என தெரிவித்தார்.

புதிய காவேரி பாலம் பணிகள் நடைபெற்று வருவதாகவும் தேர்தலுக்கு முன்பு டிசம்பர் மாத இறுதியில் அதனை திறப்பு விழா காண ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது பழைய பாலம் இரு புறங்களிலும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தமிழக முன்னாள் முதல்வர் கலைஞர் அவர்கள் கட்டப்பட்ட பாலமாகவும் தற்போதைய முதல்வர் அவர்கள் என இரண்டு முதல்வர்கள் தான் பாலங்கள் கட்டினார்கள் என தெரிவித்தார்.

நடிகர் விஜய் நேரடியாக குற்றச்சாற்று வைக்கின்றார் தேர்தலுக்கு சவாலாக இருக்குமா என்ற கேள்விக்கு..

ஜனநாயகத்தில் யார் வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் பேசலாம் போர்க்களம் தான் இதனை மக்கள் முடிவு செய்வார்கள் மக்களை சந்திக்க நாங்கள் தயாராக உள்ளோம் கண்டிப்பாக வெற்றி பெறுவோம் யார் வந்தாலும் தி.மு.க. எதிர்கொள்ளும் வேலையை பொருத்தவரை நாங்கள் தொண்டராக இருந்து சொல்கிறோம் தலைவர் எந்த கட்டளையிட்டாலும் அதை நிறைவேற்றுவது எங்கள் வேலை என தெரிவித்தார்.

நகர்புற உள்ளாட்சி நடைபெற்று வருகிறது உள்ளாட்சிக்கு 370 பஞ்சாயத்து நகராட்சி மற்றும் மாநகராட்சியுடன் இணைந்துள்ளது.

பஞ்சாயத்து யூனியன்களை பிரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது குறிப்பாக நீதிமன்ற உத்தரன்படி பணிகள் நடைபெற்று வருகிறது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது திருச்சி மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதீப் குமார், திருச்சி மாநகர காவல் துறை ஆணையர் காமினி, மாநகராட்சி ஆணையர் சரவணன், திருச்சி மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், சேர்மன் துரைராஜ், மாத்தூர் கருப்பையா, மாவட்ட துணைச் செயலாளர் முத்துசெல்வ ம் டோல்கேட் சுப்பிரமணி காஜாமலை விஜய், கிராப்பட்டி செல்வம் மண்டி சேகர், துர்கா தேவி மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் பலர் உடன் இருந்தனர்.



தஞ்சை வடக்கு மாவட்டம், பாபநாசம் சட்டமன்றத் தொகுதியில் இல்லம் தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கை முகாமை மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. தொடங்கி வைத்தார். மாநில மாணவர் அணி துணைச்செயலாளர் மன்னை த.சோழராஜன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் க.செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முகாமில் ஒன்றிய செயலாளர்கள் கோ.தாமரைச்செல்வன், தியாக.சுரேஷ் குமார், பி.எஸ்.குமார், மு.நாசர், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.துரைமுருகன், பாபநாசம் பேரூர் செயலாளர் ச.கபிலன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் கே.செல்வமுத்து குமரன், ஹனிபா, மாணவர் அணி நிர்வாகிகள் வினோத்குமார் இலக்கியா, அசோக், சுரேஷ்குமார், வழக்கறிஞர் வெற்றிச்செல்வன், ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள், கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர். பேரூராட்சி தலைவர் பூங்குழலி கபிலன் நன்றி கூறினார்.



நாகை மாவட்டம் சிக்கல் நவநீதேஸ்வர சுவாமி கோயில் உள்ளிட்ட 100 கோயில்களில் இந்து சமய அறநிலைத்துறை சார்பில் புதிதாக அமைக்க ஆன்மீகப் புத்தக விற்பனை நிலையத்தை தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்ததையடுத்து சிக்கல் நவநீதேஸ்வர சுவாமிகோயிலில் அமைக்கப்பட்டிருந்த ஆன்மீக புத்தக விற்பனை நிலையத்தில் நாகை மாவட்ட தி.மு.க. செயலாளரும், தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழக தலைவர் என். கௌதமன் குத்து விளக்கு ஏற்றி வைத்து புத்தக விற்பனையை தொடங்கி வைத்தார். உடன் நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகை வடக்கு ஒன்றிய கழக செயலாளர் சிக்கல் என்.ஆனந்த், இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையர் ராணி, சிக்கல் கோவில் செயல் அலுவலர் மணிகண்டன். மாவட்ட அறங்காவல் குழு தலைவர் நாகரத்தினம், உறுப்பினர் காளிதாஸ் மற்றும் பலர் உள்ளனர்.



புதுக்கோட்டை மாநகர தி.மு.க. சார்பில் மாநகர பொறுப்பாளர் வே.ராஜேஷ் போக்குவரத்து காவல்துறையினருக்கு கோடை வெயிலை தணிப்பதற்காக கூலிங் கிளாஸ், பழச்சாறு, டவல் ஆகியவற்றை வழங்கினார். உடன் மாநகர துணைச் செயலாளர் ப.ரெங்கராஜன், சி.மதியழகன், கண்மணி சுப்பு, பூக்கடை முருகேசன், செல்வம், செந்தில், மற்றும் மாநகரக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் தலைவாசல் மத்திய ஒன்றிய தி.மு.க. சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி பிறந்த நாள் விழா மற்றும் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர் சின்னதுரை, ஒன்றிய செயலாளர்கள் சாத்தப்பாடி மணி, பாலமுருகன், கழகப் பேச்சாளர் சிவக்கொழுந்து, குணசேகரன், லட்சுமணன், ஜெயபாலன், தேவேந்திரன், மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## செல்போனுக்கு சிக்னல் அனுப்பும் தொழில்நுட்பத்திற்கான உரிமம்

# பி.எஸ்.என்.எல் நிறுவனத்திற்குதான் வழங்கப்படும்!

## மாநிலங்களவையில் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் உறுதி!

நாமக்கல், ஏப். 7-

மலைப்பிரதேசங்களில் வசிக்கும் மக்களுக்கு செல்போன் மற்றும் இண்டர்நெட் சேவை வழங்குவதற்காக, டைரக்ட் டு டிவைஸ் சேவைக்கு, பிஎஸ்என்எல் நிறுவனத்திற்கு அனுமதி வழங்கப்படும் என பார்லியில், கே.ஆர்.என். இராஜேஸ்குமார் எம்.பி. யின் கேள்விக்கு ஒன்றிய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் பதில் அளித்தார்.

டில்லியில் நடைபெற்று வரும் பார்லி கூட்டத்தொடரில், ராஜ்யசபாவில் ஜீரோ அவர்ஸ் கேள்வி நேரத்தில், ராஜ்யசபா தி.மு.க. எம்.பி., நாமக்கல் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் கலந்து கொண்டு பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

இந்தியாவில், செயற்கைக்கோலில் இருந்து நேரடியாக செல்போனுக்கு சிக்னல் வழங்கும் டைரக்ட் டூ டிவைஸ் சிஸ்டத்தின் கீழ் தொலைத்தொடர்பு இணைப்புகள் பி.எஸ்.என்.எல். நிறுவனத்திற்கு வழங்கப்படவேண்டும். இந்த நவீன தொழில்நுட்பத்தின் மூலம், தொலைத் தொடர்பு வசதி இல்லாத மலைப்பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கும், குக்கிராமங்களுக்கும் செல்போன் மற்றும் இண்டர்நெட் வசதி வழங்க முடியும். இதற்கான லைசென்ஸ் தனியாருக்கு வழங்கினால் அவர்கள் வியாபார நோக்கில் செயல்படுவர்களே தவிர, மக்களுக்கு தேவையான அளவில் சேவைகளை வழங்க மாட்டார்கள். எனவே இந்த டைரக்ட் டூ டிவைஸ் தொழில்நுட்பம் பி.எஸ். என்.எல். நிறுவனத்திற்கு வழங்கப்படுமா? என கேள்வி எழுப்பினார்

இதற்கு பதில் அளித்து பேசிய ஒன்றிய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் ஜோதிராதித்யா சிந்தியா தொலைத் தொடர்பு வசதிகளே இல்லாத கிராமங்களுக்கு செல்போன் சேவை மற்றும் இன்டர்நெட் சேவை வழங்குவதற்கு, டைரக்ட் டூ டிவைஸ்



திட்டம் பெரும் உதவியாக இருக்கும். எனவே டைரக்ட் டூ டிவைஸ் திட்டத்தின் கீழ், தற்போது, பி.எஸ்.என்.எல். நிறுவனத்திற்கு மட்டுமே அந்த தொழில்நுட்பம் வழங்கப்படும், விரைவில் அதன் சேவை துவங்கும். மேலும், பி.எஸ்.என்.எல். நிறுவனம் கடந்த 18 மாதங்களில் 10,448 புதிய செல்போன் டவர்களை அமைத்துள்ளது. அதில் 80 சதவீதம் பணிகள் நிறைவடைந்த நிலையில் விரைவில் அவைகள் பயன்பாட்டுக்கு வரும். இவ்வாறு அமைச்சர் ஜோதிராதித்யா சிந்தியா பதில் அளித்தார்.



வடகோவை கிராஸ்கட் சாலையில் உள்ள கோவை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் முதலமைச்சர் கோவை வருகை தருவதை முன்னிட்டு தமிழ்நாடு மின்சாரம் மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் மாவட்ட பொறுப்பு அமைச்சர் வி.செந்தில்பாலாஜி தலைமையில், மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில், மாபெரும் பிரம்மாண்டமான முறையில் வரவேற்பு அளிப்பது குறித்து, மாநகர் மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதிக் கழகச் செயலாளர்கள் கூட்டம் மாநகர் மாவட்ட செயலாளர் நா.கார்த்திக் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம். பி.முருகன், கழக மாணவர் அணி துணைச் செயலாளர் வி.ஜி.கோகுல், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.எஸ்.பி.கண்ணப்பன், வே.பாலசுப்பிரமணியன், ஆனந்த குமார்,பொதுக்குழு உறுப்பினர்கள் மு.மா.ச.முருகன், வழக்கறிஞர் மா.மகுடபதி, இரா.மணிகண்டன், ச.குப்புசாமி, சரஸ்வதி புஷ்பராஜ், சங்கனூர் ஆனந்தகுமார் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை, மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான **உதயநிதி ஸ்டாலின்** அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–4 க்கு உட்பட்ட தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, ஈரோடு வடக்கு மற்றும் சேலம் கிழக்கு ஆகிய மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 07.04.2025 திங்கட்கிழமை | மாலை 4.00 மணி | தருமபுரி கிழக்கு | கே.ஜே.பிளாசா, சேலம் பிரதான சாலை, தருமபுரி. |
| 08.04.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | தருமபுரி மேற்கு | என்.என்.மஹால், சேலம் புறவழிச் சாலை, அரூர், தருமபுரி. |
| 09.04.2025 புதன்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் கிழக்கு | நளா ஹோட்டல், திருச்சி சாலை, நாமக்கல். |
| 10.04.2025 வியாழக்கிழமை | காலை 9.00 மணி | நாமக்கல் மேற்கு | கொங்கு சமுதாயக்கூடம், அண்ணா சிலை அருகில், திருச்செங்கோடு. |
| 10.04.2025 வியாழக்கிழமை | மாலை 4.00 மணி | ஈரோடு வடக்கு | இராமாயம்மாள் திருமண மண்டபம், கோபிச்செட்டிபாளையம். |
| 11.04.2025 வெள்ளிக்கிழமை | காலை 9.00 மணி | சேலம் கிழக்கு | தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயம், கழக அலுவலகம், வாழப்பாடி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 05-04-2025

